அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 183/2016

தேதி: 01.12.2016

**வெடி மருந்து ஆலை விபத்து 20க்கும் மேற்பட்டோர் பலி**
**சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்.**

திருச்சி மாவட்டத்தில் உள்ள முருங்கம்பட்டியில் தனியார் வெடி மருந்து ஆலையில் இன்று காலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 20க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பலர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு என் சார்பாகவும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் படுகாயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

இதுபோன்ற வெடி மருந்து ஆலைகள் மற்றும் விபத்து ஏற்படுத்தக்கூடிய தொழிற்சாலைகள் தகுந்த பாதுகாப்பு கருவிகளுடன் முன்னேற்பாடுகளுடன் செயல்படவேண்டும்.

**ஆர் சரத்குமார்** B Sc.

தலைவர் - பொதுச்செயலாளர்